# முல்லைத்தீவை விழுங்கும் நெகிழி

மண்ணுக்குள் மக்காது;
எரித்தாலும் ஒக்காது;
ஓசோனை ஓட்டையாக்கும்;
மண்ணையே மலடாக்கும்;
அனைத்தையும் அழித்துவிட்டு
'அது' மட்டும் நிலைத்திருக்கும்....
அரக்கனை அழித்திட,
எடுப்போம் புது அவதாரம்
தவிர்ப்போம் இனி 'நெகிழியை'



**"இன்று உலகினையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொவிட்-19 ஐ விட கொடியது பிளாஸ்டிக்"**

**மு**ல்லைத்தீவு மாவட்டத்தில் பிளாஸ்டிக் பொருட்க்களின் பயன்பாடு தற்போது கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகின்றது. பிளாஸ்டிக் இல்லாமல் இன்று எந்த மூலை முடுக்கிலும் வர்த்தகம் இடம்பெறுவதில்லை. அன்றாடம் வீடுகளில் சேரும் கழிவு மற்றும் குப்பைகளில் பிளாஸ்டிக்கின் பங்கு சரிபாதியாக காணப்படுவதோடு. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்க்கு இது பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

ஒரு பிளாஸ்டிக் பொருள் மட்க்குவதற்க்கு 100 ஆண்டு முதல் 1000 ஆண்டு வரையான காலப்பகுதியினை எடுக்கும், ஒரு பிளாஸ்டிக் பையானது மக்களினால் சராசரியாகப் பயன்டுத்தும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மாத்திரமே ஆனால் அவை மட்க்குவதற்க்கு பல 100 ஆண்டுகள் எடுக்கும். இவ் பிளாஸ்டிக் கழிவுகளின் மூலம் மனிதன் தனது வாழ்விற்க்கு தீங்கினை தேடியது மாத்திரம் இன்றி கடல் வாழ் உயிரினம் உள்ளிட்ட ஏனைய உயிரினங்களுக்கும் எமனாக அமைந்துள்ளான் எனக் கூறினால் மிகையாகாது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமாக பிளாஸ்டிக், பொலித்தீன் உள்ள பிரதேசங்களாக கடற்கரையோரங்கள், ஆறுகள், குளங்கள், ஆலயங்கள், வீதியோரங்கள், வேலைத்தளங்கள், வீடுகள், ஏனைய பொது இடங்கள் போன்ற பல இடங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவ்வாறான பிளாஸ்டிக் பொருட்க்கள் உணவுப் பொருட்க்களினை சேமிக்க, நீரை சேமிக்க என பல தேவைகளுக்கான அத்தியாவசியமாகவும் இவை மாறியுள்ளன. நவீன உலகத்தில் நாகரீகம் காரணமாகவும் வேலைப்பழுவினைக் குறைத்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்காகவும் பிளாஸ்டிக்கை பயன்படுத்துவதனை முல்லைத்தீவு வாழ் மக்கள் மாத்திரம் இன்றி அனைவரும் தமது வழக்கமாக்கி விட்டனர்.

எமது வாழ்வில் ஒன்றிப்போன இந்த பிளாஸ்டிக் எமக்கே எமனாகின்றது என்பதனை எம்மில் எத்தனை பேர் உணர்ந்திருக்கின்றோம் பொதுவாக பிளாஸ்டிக்கை மண்ணில் வீசும்போது உக்காது எம்மை தாங்கியிருக்கும் பூமிக்கு பல கேடுகளை

Scanned with CamScanner

விளைவிப்பது பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும் ஆனால் பூமியை மாசுபடுத்துவது மாத்திரமின்றி பிளாஸ்டிக் பாவனை மனித இனத்தின் வாழ் நாட்க்களை குறைத்து வருகின்றது என்றால் ஏற்றுக் கொள்வீர்களா? ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் ஏனெனில் இது தொடர்பில் துறைசார் நிபுணர்கள், மருத்துவர்கள் என பலரும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளினை நடத்தி பிளாஸ்டிக்கினால் மனிதனுக்கு ஏற்ப்படும் பல்வேறு பிரச்சனைகளை உறுதிப் படுத்தியுள்ளனர். எல்லா வகையான பிளாஸ்டிக் பொருட்க்களும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்குமா? என்ற கேள்வி சாதாரமாக அனைவரிற்க்கும் எழும் நிச்சயமாக சகல விதமான பிளாஸ்டிக் பொருட்க்களும் திரவப் பொருட்க்களை கசிய விடுகின்றன.

உணவுப் பொருட்க்களினை இடுவதெற்க்கென பிரத்யோகமான பிளாஸ்டிக் பொருட்க்கள் தயாரிக்கப் படுகின்ற போதும் முல்லைத்தீவில் உள்ள காலநிலை காரணமாக சகல பிளாஸ்டிக்குகளும் இரசாயன மாற்றத்திற்க்கு உள்ளாகின்றன. அதாவது உணவுப் பொருட்க்கள் அல்லது குடிபானங்களை அடைப்பதற்க்கு தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் ஆகக் கூடிய வெப்பநிலையாக 20 பாகை c பேணப்பட வேண்டும் என்பதாகும் எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சராசரி வெப்பநிலை 32 பாகை c ஐ விட அதிகமாகக் காணப்படுகின்றமையினால் அதிக வெப்பத்தினால் ஏற்ப்படுகின்ற இரசாயன மாற்றங்கள் பிளாஸ்டிக் கொள்கலனுக்குள் உள்ள உணவுப் பொருட்க்களுடன் கலந்து விடுகின்றன. அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் வெப்ப நிலையானது பிளாஸ்டிக் தாங்கக் கூடிய வெப்பநிலையினை விட அதிகமாகும்

அத்துடன் 120 நாட்க்களுக்கு மேலாக பிளாஸ்டிக் கொள்கலனுக்குள் உணவுப் பொருட்க்களினை பேணுவது இரசாயன மாற்றத்திற்க்கு வழிவகுக்கும். பிளாஸ்டிக் உடைந்தாலும் கிழிந்தாலும் அது நச்சுக்களை வெளியேற்றிக் கொண்டே இருக்கும், பிளாஸ்டிக்கில் நல்ல பிளாஸ்டிக் என்பதே இல்லை பிளாஸ்டிகை மோசமானது மிகவும் மோசமானது என்றே பிரிக்க முடியும்.

பிளாஸ்டிக் பாவனையினால் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சனைகள் பற்றி விரிவாக நோக்குவோமாயின் உணவுப் பொருட்கள் மற்றும் குடி பானங்களினை சேமிப்பதற்காக அல்லது அடைத்து வைப்பதற்குப் பயன்படும் பிளாஸ்டிக் பொருட்கள் இரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகி திரவப் பொருட்களினை கசிய விடுகின்றன. இவ்வாறு கசிய விடப்படும் இரசாயனங்கள் உணவுப்பொருட்கள் அல்லது குடிபானங்களுடன் சேர்ந்து உடலுக்குள் செல்வதனால் சிறிது சிறிதாக நச்சுப் பொருட்கள் ஊடுருவி எமக்கு பல நோய்களை உண்டு பண்ணுகின்றது. இவ்வாறு உடலுக்குள் செல்லும் இரசாயன திரவக்கழிவுகள் ஒவ்வொரு நபரினதும் இரத்தம்,சிறுநீர் என்பவற்றுடன் கலந்து விடுகின்றது.



இதனால் புற்றுநோய், நீரிழிவு, மலட்டுத்தன்மை, கருச்சிதைவு, பிறப்புக்குறைபாடுகள் மற்றும் ஆஸ்த்துமா போன்ற சுகாதார ரீதியான பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக கர்ப்ப காலத்தில் பிளாஸ்டிக்கினால் வெளியிடப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் உடலில் சேர்வதானது கருவில் இருக்கும் குழந்தைகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. குழந்தை பிறந்த பின்னர் சிறுவயதிலேயே ஆஸ்த்துமா போன்ற நோய்களுக்கு ஆளாகப்படுகின்றனர். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில்

Scanned with CamScanner

உள்ள மக்களின் வீடுகளில் குழாய் நீரினை கொண்டு செல்வதற்கு P.V.C குழாய்களே பயன்படுத்தப்படுகின்றன. இதனை விட தண்ணீர் தாங்கிகளாக பிளாஸ்டிக் தாங்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. பிளாஸ்டிக் தாங்கிகள் வீடுகளின் கூரைகளின் மேல் கொழுத்தும் வெய்யிலில் வைக்கப்படுவதனால் அதிக வெப்பத்தின் காரணமாக ஏற்ப்படும் இரசாயண மாற்றம் அதில் உள்ள தண்ணீருடன் கலந்து மனித உடலுக்குள் செல்கின்றன. இதுவே மனிதனுக்கு பல்வேறு நோய்கள் ஏற்ப்படுவதற்க்கு காரணமாகின்றது.

இதற்கான மாற்று வழிதான் என்ன என்று வினாவுவதனை விட பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகளை பயன்படுத்தாது இருப்பதே சிறந்தது எனக் கூறப்படுகின்றது. சில கட்டாயத் தேவைகளுக்காக பயன்படுத்த வேண்டுமாயின் பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகளை வெப்பம் நிறைந்த கூரைகளின் மீது வைக்காது பாதுகாப்பாக கட்டப்பட்ட பகுதியில் வெப்பம் படாது மறைத்து வைப்பதே மாற்று வழியாக இருக்கும்.

அடுத்து குழந்தைகளுக்கான பால்மா போத்தல்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிளாஸ்டிக்கிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இவ் பிளாஸ்டிக் பால்மா



போத்தல்களினை தொற்று நீக்குவதற்காக கொதிக்க வைத்து பயன்படுத்துகின்றனர். இதன்போது ஏற்படுகின்ற இரசாயன மாற்றம் நேரடியாக குழந்தைகளை சென்று தாக்குகின்றது. இதனால் இக் குழந்தைகள் சுகாதார. ரீதியான பல பிரச்சனைகளுக்கு சிறு வயதிலேயே முகங்கொடுக்கின்றனர். இதுவே பல குழந்தைகள் இங்கு ஆஸ்த்துமா நோய்க்கு ஆளாக்கப்படுவதற்க்கு பிரதான காரணமாகின்றது என வைத்தியநிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

பிளாஸ்டிக் துகள்கள் மிகச் சிறிய அளவில் இருப்பதனால் இவை சமிபாட்டுத் தொகுதியில் அகத்துறிஞ்சப்பட்டு இரத்தச் சுற்றுடன் கலந்து சகல உறுப்புக்களையும் சென்றடைகின்றன. பிளாஸ்டிக் துகள்களின் படிவினால் மனித உறுப்புக்கள் மெது மெதுவாக பாதிப்புக்கு உள்ளாகின்றன காலவோட்டத்தின் இறுதியில் சிறுநீரகம், ஈரல் போன்ற உறுப்புக்களின் செயல்திறன் பாதிப்புக்குள்ளாகுவதுடன் இறுதியில் இவ் உறுப்புக்கள் செயலிழக்கும் நிலமை உருவாகின்றது. பிளாஸ்டிக் பொலித்தீன் என்பவற்றால் ஏற்ப்படுகின்ற மிக முக்கியமான நோய் புற்றுநோய் ஆகும் புற்றுநோய் ஏற்ப்படுத்தும் மரணங்கள் டெங்கு நோயால் ஏற்ப்படும் மரணங்களை விட அதிகமாகும். எனினும் இன்று நாம் டெங்கு பரவுதலைப் பற்றி அச்சமடைவதனைப் போல புற்றுநோய்க்கு அஞ்சுவதில்லை. சூழலில் சேரும் பிளாஸ்டிக் கழிவுகள் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்க்கு ஏற்ற சூழலை உருவாக்குகின்றன, பிளாஸ்டிக் துகள்கள் கருவில் உள்ள குழந்தைகள் கூட குறைபாட்டுடன் பிறப்பதற்க்கு காரணமாகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்து வரும் பிளாஸ்டிக் பாவனையினால் மனித உயிர்களுக்கு இவ்வாறான பல நோய்கள் ஏற்ப்படுவதற்க்கு காரணம் ஆகின்றது.




Scanned with CamScanner

பிளாஸ்டிக்கினால் மனிதன் தவிர்ந்த ஏனைய உயிரிணங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் பற்றி நோக்குவோமாயின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்கரையோரங்களில் வசிக்கும் மக்கள் அதிகமாக மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபடுகின்றனர். மேற்படி தொழிலுக்கு நெகிழிகளால் ஆன வலைகளினைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது. அதிக ஆண்டுகள் அவை உழைத்தாலும் அவைகளின் நச்சுத்தன்மையினால் கல்வாழ் உயிரினங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அடுத்து கடலில் மிதக்கும் மைக்ரோ பிளாஸ்டிக் துகள்களைத் தனது உணவாகக் கருதும் சிறு மீன்கள் மற்றும் கடல் வாழ் உயிரினங்கள் அதனை உட்கொள்ளும் இவ்வாறு உள்ளே செல்லும் பிளாஸ்டிக் துகள்கள் அதன் வயிற்றில் தங்கி விடுவதனால் சில நாட்களில் அவை இறப்பை சந்திக்கின்றன. ஆமைகள் முதல் மீன்கள் வரை முல்லைத்தீவுக் கடற்கரையோரங்களில் இறந்து கரை ஒதுங்குவதற்கு காரணம் இவ் பிளாஸ்டிக் குப்பைகளே ஆகும். சில மின்களின் வயிற்றுப் பகுதியில் பிளாஸ்டிக் துகள்களோ அல்லது சிறு கட்டிகளையோ காணமுடியும் இது பிளாஸ்டிக் கழிவுகளினால் மீன்களுக்கு ஏற்ப்படும் கேன்சர் கட்டிகளாகும் இவ்வாறான இவ் பிளாஸ்டிக் பொருட்க்களினை கடல்நீரில் போடுவதன் மூலம் 2050 இல் கடலில் மீன்களை விட பிளாஸ்டிக் பொருட்க்களே அதிகமாக காணப்படும் நிலை ஏற்ப்படும்.



மேலும் இவ் நெகிழிப் பொருட்க்களினை கடல்நீரில் போடுவதன் மூலம் அதன் நச்சுத்தன்மை நீரில் கலக்கும் போது உயிரினங்களின் உணவுச்சுழற்ச்சி முறை பாதிப்படைந்து ஆரோக்கியம் கெடுகின்றது. அத்துடன் இங்கு வாழும் மக்கள் தேவையற்ற உணவுப் பொருட்க்களினை நெகிழியுடன் சேர்த்து அகற்றுவதனால் பல உயிரினங்கள் அவற்றை உண்டு செரிமனம் ஆகாமல் இறந்து விடுகின்றன. மேலும் பூமியில் புதைந்து கிடக்கும் நெகிழிப் பொருட்க்களினால் மரங்கள், செடி கொடிகள் பூமியில் உள்ள நீர்ச்சத்து மற்றும் புரதச் சத்துக்களை பெறுவது குறைந்து வளர்ச்சி இல்லாமல் போகின்றது.



மேலும் உணவுச்சங்கிலியில் மாறுபாடுகளை ஏற்ப்படுத்துகின்றது அதாவது மிக நுண்ணிய அளவில் கூட நெகிழி காணப்படுவதனால் பிளாங்டன் உள்ளிட்ட நுண்ணுயிர்கள் கூட அழிந்து விடும் இதனால் அதனை சார்ந்துள்ள பெரு விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகின்றன இதன் மூலம் ஒட்டுமொத்த உணவுச்சங்கிலியும் பாதிப்படைகின்றது. ஆகவே முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவில் பிளாஸ்டிக் பயன்பாடு காணப்படுவதனால் மக்கள் மாத்திரம் இன்றி ஏனைய உயிரினங்களும் பாதிப்படைகின்றன.

அடுத்து பிளாஸ்டிக் பாவனையினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி நோக்குவோமாயின் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெகிழிகளின் அளவினை விட அதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகமாக காணப்படுகின்றன முல்லைத்தீவில் நிலத்தடி நீர் மாசடைவதற்கு பிளாஸ்டிக் பொருட்கள் காரணமாகின்றது அதாவது குப்பைகளினை சேகரிக்கும் இடங்களில் ஊடுருவும் மழை

Scanned with CamScanner

நீரின் மூலம் நிலத்தடி நீர் அதிகமாக மாசடைகின்றது. அடுத்து பிளாஸ்டிக் பொருட்களினை முல்லைத்தீவு மக்களில் அதிகமானோர் அதனை மீள் சுழற்சி செய்யாமல் பிளாஸ்டிக் கழிவுகளை வெளியேற்றவும் முடியாமல் அதனை நிலத்தில் புதைக்கின்றனர் இதனால் அவை மண்ணில் உக்காமல் நிலம் மாசுபாடு அடைவதற்கு காரணமாகின்றது.

அடுத்து வெட்டவெளியில் பிளாஸ்டிக் பொருட்களினை முல்லைத்தீவு மக்கள் ஏரியூட்டுகின்றனர் இதனால் நெகிழிகள் வெளிப்படுத்தும் நச்சு வாயுக்கள் காற்றினை மாசுபடுத்துகின்றன. மேலும் பாவனை செய்த பிளாஸ்டிக் பொருட்களினை இம்மாவட்ட மக்கள் அதிகமாக குளங்கள், ஆறுகள், கடல் நீர், போன்றவற்றில் இடுகின்றனர். இதன் மூலம் புவியின் மேற்பரப்பு நீர் நிலைகளும் மாசுபடுகின்றன. அடுத்து ஓசோன் படை சேதமடைவதற்கும் இப் பிளாஸ்டிக்கின் பாவனையானது காரணமாகின்றது. அதாவது இப் பிளாஸ்டிக் பொருட்களை எரிக்கும்போது அதனால் இருந்து வெளியேறும் காபனீரொட்சைட்டு வாயுவானது ஓசோன்படை சேதமடைவதற்க்கு காரணமாகின்றது. ஆகவே முல்லைத்தீவு மாவட்டத்தின் அதிகபடியான பிளாஸ்டிக் பாவனையானது சுற்றுச்சூழல் மாசுபடுவதற்க்கும் காரணமாகின்றது.



**பிளாஸ்டிக்கால் ஏற்ப்படும் பிரச்சனைகளை தடுப்பதற்க்கு அல்லது குறைப்பதற்க்கு அனைவரும் பின்பற்ற வேண்டிய விடயங்கள்** பற்றி நோக்குவோமாயின் பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அதற்க்கு பதிலாக துணிப்பைகளை உபயோகியுங்கள், குப்பைகளை மட்க்கும் மற்றும் மட்க்கா குப்பையாக பிரித்து மேலாண்மை செய்யுங்கள், பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை பயன்படுத்துவதனை தவிர்த்துக் கொள்ளுங்கள், குழந்தைகளுக்கு பிளாஸ்டிக் பால்மா போத்தல்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள், உணவுப் பொருட்க்களை உட்க்கொள்ள பிளாஸ்டிக் பொருட்க்களை உபயோகிப்பதை தவிருங்கள் மற்றும் உணவகங்களில் வாழை இலையில் உணவினை பரிமாறுங்கள், நீரை சேமித்து வைப்பதற்க்கு மட்ப்பாண்டங்களை பயன்படுத்துங்கள், பிளாஸ்டிக் குப்பிகளில் அல்லது பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டு வரும் உணவுகளை வாங்குவதனைத் தவிருங்கள், பிளாஸ்டிக் பொருட்க்களை கண்டபடி தூக்கி வீசாதீர்கள்.

அடுத்து 5R இனை எப்போதும் கடைப்பிடியுங்கள் அதாவது தேவையற்ற பிளாஸ்டிக் பொருள்களை வாங்குவதை தவிருங்கள் (Refuse), பிளாஸ்டிக் தேவைகளை இயன்றவரை குறையுங்கள் (Reduce), முடிந்தவரை நீண்ட காலம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் முறைகளை கடைப்பிடியுங்கள் (Reuse), தூக்கி எறிவதற்கு முன்னர் இன்னொரு முறை பயன்படுமா என்பது குறித்து சிந்தித்து செயற்ப்படுங்கள் (Rethink), எறியும் கழிவுகளில் இருந்து சுற்றுச்சூழலுக்கு பாதகம் இல்லாத வகையில் மீளவும் பிளாஸ்டிக்கை பிரித்தெடுத்து பயன்படுத்துங்கள் (Recycle), இவ் ஐந்து செயல்பாடுகளையும் சரியான முறையில் பின்பற்றுவதன் மூலம் நம் உடலினையும் நாம் வாழும் பூமியையும் ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும்.



Scanned with CamScanner

விழிப்புணர்வு கூட்டம், கருத்தரங்கு, போராட்களினால் பிளாஸ்டிக் குப்பைகளை ஒழித்து விட முடியாது. அரசு கடுமையான சட்டம் இயற்றுவதன் மூலமும் பொது மக்களின் முழுமையான ஒத்துழைப்பு மூலமும் பிளாஸ்டிக் குப்பைகளை நம் தேசத்திலிருந்து ஒழிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட நெகிழியை குறைப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றுவதன் மூலம் பிளாஸ்டிக்கினால் ஏற்படும் சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வுகான முடியும். எமது முல்லை மாவட்டத்தினை மாத்திரமின்றி ஏனைய மாவட்டங்களும் இதனைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையினை ஆரோக்கியமான நாடாக மாற்ற முடியும்.

**முல்லையில்**
**நீரை விழுங்கினாய்....**
**நிலத்தை விழுங்கினாய்....**
**உயிர்களை விழுங்கினாய்.....**
**இனியும் வேண்டாம்**
**உனக்கு விடை கொடுக்கின்றோம்**
**நெகிழியே...**
**விழுங்காதே**
**விலகிச் செல்....**




"பிளாஸ்டிக்கை தவிப்போம்........... சுற்றுச்சூழலையும் எம்மையும் பாதுகாப்போம்........ பிளாஸ்டிக் மாசு இல்லாத மாவட்டமாக, ஏனைய மாவட்டங்களுக்கும் முன்னோடியாக விழித்த மாவட்டமாய் எழுந்து நிற்போம்"

## Group members

**T. Tharsika. ( 2017/A/440 )**
**K. Sivalojini. ( 2017/A/135 )**
**U. Kobika. ( 2017/A/155 )**
**T. Thulasi. ( 2017/A/462 )**
**G. Rinuya. ( 2017/A/314 )**

Scanned with CamScanner